(திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1993), பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி.

(ஏ) தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகை முறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1993). மாண்புமிகு கல்வி அமைச்சர்.

பிற்பகல் 2—20

* மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1993@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்க முடிவு எடுத்து இருப்பதை நான் வரவேற்கிறேன். அதோடு தமிழ்க் கல்லூரியிலே படித்து வேலையில்லாமல் இருக்கிறார்கள்; அப்படி வேலை இல்லாமல் இன்றைய தினம் வயது கடந்து, வேறு எந்த வேலைக்கும் செல்ல முடியாத சூழ்நிலையிலே தமிழகம் முழுமையும் தமிழறிஞர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தத் தமிழறிஞர்களுக்கும், தமிழ்க் கல்லூரியிலே படித்து வேலையற்று இருக்கக்கூடிய, வாழ்க்கையிலே சிரமப்படக்கூடிய உள்ள அவர்களுக்கும் உதவித் தொகை வழங்குவதற்கு அரசு அதிலே இணைத்து வழங்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

@ 29—10—1993 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தமிழ் படித்து தமிழ் ஆய்வு செய்து தமிழறிஞர்களாக வீற்றிருந்த தமிழுக்காகத் தொண்டு செய்து ஓய்வு பெற்றதற்குப் பின்னால் அவர்களைப் பராமரிக்கின்ற விதத்தில், எந்த அரசும் செய்யாத வகையில் அவர்களுடைய ஆயுள் முழுவதும் தமிழுக்காகத் தொடர்ந்து சேவை செய்கின்ற வகையில் தமிழுக்கே உரிய நூல்களை ஆய்வு செய்து வெளிக் கொண்டு வருவதற்கு ஊக்கமாக இருக்கின்ற வகையிலே இந்த அரசானது, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் எதிர்காலத்திலே தமிழ் ஆய்வு செய்கின்றவர்கள் எல்லாம் துணிந்து ஆய்வு செய்திட முடியும்; அப்படி ஆய்வு செய்து திறன்களை வெளிக் கொண்டு வருகின்றவர்களுக்கு உதவியாகவும், உறுதுணையாகவும் இருக்கின்ற வகையில் இந்த அரசால் அளித்திருக்கின்ற சட்டமுன் வடிவை வரவேற்று அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள (திருத்த) சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல் மற்றும் பல்வகை வகைமுறைகள் (திருத்த) சட்ட முன்வடிவு சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண், 39/1993 நிறைவேற்றப்பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது,

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது

10. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி)

(இ) மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பலிாமல் பேரவையை ஒத்திவைத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைப்பதற்கான தீர் மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''பேரவையின் 25 (1) விதியின்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்படலாம்
என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க, (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க,

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை..

தீர்மானம் ஒருமனதாக ஏற்கப்படுகிறது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்படுகிறது, வணக்கம்

பின்னர் பேரவை பிற்பகல் 2-24 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.